
## திராவிடத்தால் வாழ்கிறோம்

1257

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்







### கூச்சமற்ற பொய்கள், தேவையற்ற சவடால்கள்!

பொதுவெளியில், ‘சகிக்க முடியாத வார்த்தைகளை மிகச் சாதாரணமாக சினிமாவில் பேசுவது போல பேசிக்கொண்டிருக்கிறார், முதலமைச்சர் விஜய்’ என அவருடைய கரூர் பேச்சுக்குப் பல தரப்பில் இருந்தும் கண்டனங்கள் எழுந்துள்ளன.

இது தொடர்பாக, பதிவிட்டுள்ள எழுத்தாளர் பாரதி தம்பி, “விஜய் பேச்சை முழுமையாகக் கேட்டேன். அதை எந்த கேட்டகரியில் வகைப்படுத்துவது என்றே புரியவில்லை. ஒரு தலைவருக்கு உரிய முதிர்ச்சியும் இல்லை, ஒரு முதலமைச்சருக்கு உரிய கண்ணியமும் இல்லை, ஒரு மனிதனுக்கு உரிய பண்பும் இல்லை. திருச்சியில், ‘கவர்ச்சி காட்ட நான் என்ன... – ஆ?’ என்று கேட்டதைப் போலவே இன்றைய பேச்சிலும், “நான் சொன்ன மாதிரி வெளிப்படையா அவங்களால சொல்ல முடியுமா? அந்த தில்லு இருக்கா, திராணி இருக்கா? ஒரு... –ம் கிடையாது” என்கிறார்.

அந்தக் கோடிட்ட இடத்தில், நாம் என்ன வார்த்தையைப் போட்டு நிரப்பிக்கொள்வது? ஒரு மயிரும் இல்லை என்றா? ஒரு மண்ணும் இல்லை என்றா? இல்லை சிம்பு பாடிய பீப் சாங் போல நினைத்துக்கொள்ள வேண்டுமா? ‘பணமா, ஜனமான்னு கேட்டா, என் ஜனம்தான்டா எனக்கு முக்கியம்...’ – என்கிறார். அந்த ‘டா’ என்பது யாரைப் பார்த்து? பேச்சு முழுக்கவே இப்படித்தான். கூச்சமற்ற பொய்கள். தேவையற்ற சவடால்கள்.

‘கூட்டம் அதிகமா இருக்கும்போது, நிகழ்ச்சியையே கேன்ஸல் பண்ணியிருக்கலாமே’ என்கிறார். அப்படி செஞ்சிருந்தா, எங்களை மக்களைச் சந்திக்க விடாம தடுக்கிறாங்கன்னு இதே வாய்தானே சொல்லியிருக்கும்?

தலையில் இருந்து கால்வரை, சதிக் கோட்பாட்டை மட்டுமே நம்பும் ஒரு மனிதன், தன்னைச் சுற்றிலும் ஆதவ் அர்ஜுனா போன்ற அதே மனப்பாங்கு கொண்ட மனிதர்களைச் சேர்த்து வைத்திருக்கிறார்.

இவர்கள், ‘அரசியல் என்பதே சூழ்ச்சிதான்’ என மனதார நம்புகிறார்கள். பெற்ற வெற்றி, ‘நாம சரியான ரூட்லதான் போறோம்’ என்ற இறுமாப்பைக் கொடுத்துள்ளது. அதனால்தான், அரசை நிர்வகிக்கும் இடத்துக்கு வந்து சேர்ந்த பின்னரும் கூட, மேலும் மேலும் சதிக் கோட்பாடுகளையே பரப்புகிறார். இது இத்துடன் முடியாது. இதே Pattern அடுத்த ஐந்தாண்டுக்காலம் தொடரும். அவருடைய அமைச்சரவை சகாக்களும் இதைப் பின்பற்றுவார்கள்” என்கிறார்.

### ஃப்ளாஷ்பேக்

### தலைவரின் பாதுகாப்புப் படை!



1980-ஆம் ஆண்டு, மயிலாடுதுறையில் தலைவர் கலைஞரின் இளமைக்கால நண்பர், கீழ்வேளூர் ஒன்றியச் செயலாளர், வெங்கிடங்கால் அ.சந்தானம் அவர்களின் இளையமகள் ச.கலையரசி – சி.சிங்காரவேலு மண விழாவினைத் தலைவர் தலைமையேற்று நடத்தி வைத்தார். தமிழர் தலைவர் ஆசிரியர் அவர்களும் பங்கேற்று சிறப்பித்தார். என் தந்தை நாகை முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் அ.ராசமாணிக்கம் அவர்களும் அ.சந்தானம் அவர்களும் மாமா–மருமகன் உறவினர்கள் என்பதால், அந்த மணவிழாவில், தலைவருடனும், ஆசிரியர் அவர்களுடனும் அனைவரும் புகைப்படம் எடுத்துக்கொண்டோம். படத்தில் நிற்பவர்கள் இடமிருந்து ச.வெங்கடேஷ், இரா.அன்புதுரை, இரா.தங்கதுரை, இரா.குலோத்துங்கன், இரா.தம்பிதுரை, மு.பாலசுப்பிரமணியன், காங்கேயம் அ.மாணிக்கவேலன் ஆகியோர் இடம் பெற்றுள்ளோம். அப்போது தலைவர் கலைஞர், ‘என்ன, என்னைச் சுற்றி பாதுகாப்புப் படை அமைத்துள்ளாயே’ என மாமாவிடம் கேட்டது மறக்க முடியாத நினைவு.



இரா.தங்கதுரை

**– இரா.தங்கதுரை, மாவட்டத் தலைவர், கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை, நாகை மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

### சூழ்ச்சிகளை வென்ற பேரறிஞர் அண்ணா!

1957-ஆம் ஆண்டு தேர்தலில், பேரறிஞர் அண்ணா காஞ்சிபுரம் தொகுதியில் போட்டியிட்டபோது, போட்டி பலமாக இருந்தது. அவரைத் தோற்கடிக்க, காங்கிரஸ் கட்சியினர் எல்லா வித தேர்தல் தந்திரங்களையும் கையாண்டனர். காஞ்சிபுரத்தில் அண்ணாவுக்கு எதிராக இழிவான சொற்கள் கொண்ட சுவரொட்டிகளும் ஒட்டப் பட்டன. காஞ்சித் தொகுதியின் முடிவை, வடமாநில காங்கிரஸ் கட்சியினர் மிகவும் ஆர்வத்தோடு கவனித்து வந்தனர். எனினும், பழுத்த பழைய காங்கிரஸ்வாதியான டாக்டர்.சீனிவாசன் தோல்வியடைந்து, அண்ணா வெற்றி கண்டார்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900